குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்

(அத்தியாயம் XXIII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)

சி.சி. எண். 147/2022

அ.சா. **6**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. நாகராஜன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | திரு.பட்டு |
| ஊர் | : | |
| வட்டம் | : | |
| தொழில் | : | |
| வயது | : | 46 |
| The Hon'ble Supreme Court by *virtue* of General Order in Transfer Petition (CIVIL) No.1957 oF 2023, has ordered the subordinate Courts to stop the practice of mentioning the caste or religion of litigants in case papers. In compliance, such information of the Witnesses has neither been obtained nor mentioned in the deposition. | | |

**1873-**ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. **22.08.2024**

**(**எதிரி ஆஜர் இல்லை**.** கு**.**வி**.**மு**.**ச**.**பிரிவு **317** ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது**)**

<u>முதல் விசாரணை :</u>

நான் தற்போது பேரிகை காவல் நிலைய தலைமைக் காவலாக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.4.2021 தேதியன்று நான் பாகலூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தபோது, பாகலூர் காவல் நிலைய குற்ற எண்.77/2021 இதச பிரிவு 279 மற்றும் 337 @ 279,304(A), இதச வாக பதிவு செய்யப்பட்ட வழக்கில் அப்போதைய பாகலூர் காசவல் உதவி ஆய்வாளர் திரு.சண்முகம் அவர்கள் மேற்படி வழக்கு சம்பவத்தில் இறந்துபோன திரு.பூங்கான் என்பரின் பிரேதத்தின் மீது அன்றைய தினமே காலை 10 .00-12.30 மணி வரை சேலம் அரசு மோகன் குமாரமங்களம் மருத்துவமனை மற்றும் மருத்துவக்கல்லூரி சவக்கிடங்கின் முன்பு மேற்படி பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தார். அதன் பின்னிட்டு மருத்துவரிடம் பிரேதத்தை அடையாளம் காட்டி ஒப்புவித்து, அவர் பிரேத பரிசோதனை முடித்து என்னிடம் மேற்படி பிரேதத்தினை அதன் உடமைகளையும் ஒப்படைத்தார்,

அதை நான் அ.சா.2- திரு.சுரேஷ் அவர்களிடம் ஒப்படைத்தேன். இது சம்பந்தமாக பாகலூர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் அவர்கள் கடந்த 15.10.2021 தேதியன்று என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்.

முதல் விசாரணை முடிக்கப்படுகிறது.
எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யப்படாத காரணத்தினால் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சுருக்கு கூறப்பட்டு
தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியின் முன்
சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு
சரியென ஒப்புக்கொண்டார்

(ஒம்/-வ.அகவிதன்)
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றைவியல்
நீதித்துறை நடுவர் எண்.1, ஒசூர்.